இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 04

**EPU4534- முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு வயதினரிடையே பிரச்சினைகள் (சீராக்கல்)**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 10.03.2024 — நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. “பொருத்தப்பாட்டு பிரச்சினை” எனும் பதத்தை உமது சொந்த மொழிநடையில் எழுதுக.
2. பொருத்தப்பாட்டு பிரச்சினையுடைய பிள்ளைகளிடையே காணப்படும் பொதுவான அறிகுறிகள் நான்கினைப் (04) பெயரிட்டு, அவற்றில் இரண்டை (02) உதாரணங்கள் மூலம் விளக்குக.
3. வாழ்க்கையின் ஆரம்ப நிலையில் காணப்படும் பொருத்தப்பாட்டு பிரச்சனைகள் மூன்றினைச் (03) சுருக்கமாக விளக்குக.
4. பொருத்தப்பாட்டு பிரச்சினையுடைய பிள்ளைகளிடம் காணப்படும் மூன்று (03) வகையான இயல்புகளை குறிப்பிட்டு, அவற்றை விளக்குக.
5. பொருத்தப்பாட்டு பிரச்சினையுடைய பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குடும்ப அங்கத்தவர்களின் வகிபங்கை சுருக்கமாக விளக்குக.
6. “விசேட தேவைக்கல்வி” எனும் பதத்தை வரையறுக்குக.
7. பிள்ளைகளிடம் பொருத்தப்பாட்டு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் ஐந்து (05) வகையான மன அழுத்த நிகழ்வுகளை குறிப்பிடவும். மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் அவர்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை சுருக்கமாக விளக்குக.
8. பொருத்தப்பாட்டு பிரச்சினை காரணமாக உள்ளடங்கல் வகுப்பறையில் மனவெழுச்சி நிலையை வெளிக்காட்டும் விசேட தேவையுடைய பிள்ளைகளின் ஐந்து (05) வகைபாட்டினைப் பட்டியலிடுக.

**(05x08 =40புள்ளிகள்)**

## பகுதி – II

9. 1. அ. பொருத்தப்பாட்டு பிரச்சினைகளையுடைய பிள்ளைகளை சாதகமாக பாதிக்கும் ஐந்து (05) சூழல் காரணிகளைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

   ஆ. அவற்றில் மூன்றை (03) உதாரணங்கள் மூலம் விளக்குக. **(05 புள்ளிகள்)**

2. பொருத்தப்பாட்டு பிரச்சனைகளையுடைய பிள்ளைகளில் செல்வாக்கு செலுத்தும் பாடசாலையின் நான்கு (04) வழிகளை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

10. "வீட்டிலிருந்து பாடசாலைக்கு இடைமாறுதல் **(Transition)** என்பது விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு சிக்கலான கட்டமாகும்".

**(i)** "வீட்டிலிருந்து பாடசாலைக்கு இடைமாறுதல் **(Transition)**" எனும் பதத்தை விசேட தேவையுடைய பிள்ளைகளை அடிப்படையாக கொண்டு விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**(ii)** விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு வசதியளிக்கும் ஆசிரியராக சுற்றாடல் பிரச்சினை தொடர்பாக, விசேட தேவையுடைய பிள்ளைகள் எதிர்கொள்ளும் மூன்று (03) சவால்களை முன்வைக்குக.

**(05 புள்ளிகள்)**

**(iii)** இப்பிரச்சினைகளை சமாளிப்பதற்குரிய மூன்று (03) ஆலோசனைகளை முன்வைக்குக.

**(07 புள்ளிகள்)**

11. **(i)** பண்டூராவால் **(Bandura)** அடையாளம் காணப்பட்ட அவதானிப்பு கற்றலின் மாதிரிகளை பெயரிட்டு, உதாரணங்கள் மூலம் அவற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** பொருத்தப்பாடு அடைவதில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பிள்ளைகளிடத்தில் விருத்தி செய்யப்படவேண்டிய ஆசிரியர் தேர்ச்சிகள் ஐந்தினை (05) விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. **(i)** ஏரிக் எரிக்சனால் (1958) கூறப்பட்ட பிறப்பிலிருந்து 11 வயது வரையான உள – சமூக விருத்தியின் படிநிலைகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

**(ii)** விசேட தேவைகளையுடைய பிள்ளைகள் எரிக் எரிக்சன் உள – சமூக விருத்தி பருவங்களில் கூறப்பட்ட விடயங்களை எவ்வாறு அனுபவிக்கின்றனர் என்பதை கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

**(iii)** கல்வியாளர்கள், பராமரிப்பாளர்கள் இப்பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவ முடியுமென்பதற்கான உதாரணங்களை வழங்குக.

**(08 புள்ளிகள்)**

13. **(i)** பொருத்தப்பாட்டு பிரச்சினையுடைய பிள்ளைகளின் சமூக விருத்திக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் எவ்வாறு பங்களிக்கமுடியும் என்பதை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** பொருத்தப்பாட்டு பிரச்சனைகளை எளிதாக்குவதில் சக ஊழியர்கள், பெற்றோர்கள், சமூகம் வழங்கும் உதவியின் மூன்று (03) முக்கியத்துவத்தை பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -